**தலைப்பு 219 – விளையாட்டு அபிவிருத்தி திணைக்களம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 மே 30 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தித்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 28 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பு**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் *திணைக்களத்தினால்* வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும்

பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) ஆம் பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்கள் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தினால் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமைால் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக கூறுவதற்கு முடியாதுள்ளது

(ஆ) திணைக்களத்தினால் முன்னைய ஆண்டிற்குரியதாக நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமைால் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதி நிலைமை தொடர்பான கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (i) மீளாய்வாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதி நிலைமை தொடர்பான கூற்றில் 2018 சனவரி 01 இல் உள்ளவாறு ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி ரூபா 1,312,337,455 ஆக இருந்ததுடன் அது நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றில் ரூபா 107,593,066 ஆக இருந்தது. அதன் பிரகாரம் ரூபா 1,204,744,389 ஆன வேறுபாடொன்று கண்டறியப்பட்டது. | வேறுபாட்டிற்கு காரணங்கள் இனங்காணப்பட்டு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2017 ஆம் ஆண்டில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி ரூபா 1,312,337,455 தொகை 2017 திசெம்பர் திறைசேரி பதிவுகளை அடிப்படையாக கொண்டு சமரப்பிக்கப்பட்டுள்ளது. நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றில் 2018.01.01 இல் உள்ளவாறு ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி ரூபா 107,593,066 பெறுமதியில் ரூபா 1,272,115,674 தொகை உள்ளடக்கப்படாததுடள் ஆரம்ப மீதியை உள்ளடக்குவதற்காக இடமொன்று இல்லாமை அதற்கு காரணமாக இருந்தது. 2018 ஆம் ஆண்டின் போது மதிப்பிடப்பட்ட |

| | | |
|---|---|---|
| | | சொத்துக்களின் பெறுமதி திறைசேரி குறிப்பு மூலம் ஆரம்ப மீதிக்கு உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் அம்மதிப்பீட்டுப் பெறுமதியான ரூபா 67,371,286 பெறுமதி மேற்படி ரூபா 107,593,066 பெறுமதியினுள் உள்ளடக்கப்பட்டுள்ளது. |

**1.6.2 பதிவேடுகளும் புத்தகங்களும் பேணப்படாமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மின்சார உபரணங்கள் பதிவேடு | | |
| மின்சார உபகரணங்கள் தொடர்பாக பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டிருக்க வில்லை. | நிதிப்பிரமாணம் 454(2) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | மின் உபகரணங்கள் தொடர்பான பதிவேடொன்றை நடாத்திச் செல்லுமாறு பணிப்பாளருக்கு (பொறியிலாளர்) ஆலோசணை வழங்கப்பட்டுள்ளது. |

**1.6.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை | | | |
| XII ஆம் அத்தியா யத்தின் 2.1 ஆம் பிரிவு | ரீட் மாவத்தை விடுதியின் இல்லக் காப்பாளருக்கு 2018 செப்தம்பர் 01 ஆந் திகதி முதல் 2019 ஏப்ரல் 01 ஆந் திகதி வரை பிரசவ விடுமுறை அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் குறித்த கடமைகளை மேவுகை செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கவில்லை. | விடுமுறை அங்கீகரிக்கப்படும் போது வேறு உத்தியோகத்தர்கள ளைக் கொண்டு தேவையான கடமைகளை நிறை வேற்றிக் | எதிர்வரும் காலங்களில் இவ்வாறானசிக்கல் இடம் பெறாமல் இருக்க தேவையான நடவடிக்கைகளை எடுப்பதாக அறியத் தருகின்றேன் |

| | | |
|---|---|---|
| | | கொள்வதற்கு ஏற்பாடுகள் செய்து கொள்ளப்பட வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 கட்டுநிதி முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டிற்காக திணைக்களம் தயாரித்திருந்த கட்டுநிதி மதிப்பீட்டின் பிரகாரம் எதிர்பார்க்கப்பட்ட மற்றும் விண்ணபிக்கப்பட்ட ரூபா 6,462.9 மில்லியனாக இருந்தது. அதற்காக திறைசேரியிடமிருந்து ரூபா 2,024 மில்லியன் கட்டுநிதி கிடைக்கப் பெற்றிருந்தது. திட்டமிடப்பட்டதன் பிரகாரம் குறித்த காலப்பகுதியில் உரிய செயற்பாடுகள் நிறைவேற்றப் படாமல் அச்செயற்பாடுகளை ஆண்டின் இறுதியில் மேற்கொள்ளல் மற்றும் தேவையான கட்டுநிதி திறைசேரியால் வழங்காமை காரணமாக ரூபா 73 மில்லியனான விடிஸ்வைக் பார்க் நீச்சல் தடாக நிர்மாணச் செயற்திட்டம், ரூபா 21 மில்லியான 17 ஆம் ஒழுங்கை விளையாட்டு தொகுதி செயற்திட்டம் மற்றம் உட்கட்டமைப்பு வசதிகள் போன்ற செயற்பாடுகளை நிறைவேற்ற முடியாமல் போயிருந்தது. | திட்டமிடப்பட்ட பிரகாரம் கட்டுநிதி பெற்றுக்கொண்டு குறிதத் செயற்பாடுகளை பூர்த்தி செய்ய வேண்டும் .மதிப்பீடு செய்யப்பட வேண்டும். | நிதிஏற்பாடு கிடைக்காமை மற்றும் வேறு பல காரணங்களினால் 2017 ஆம் ஆண்டின் போது நிர்மாணங்களைப் பூர்த்தி செய்ய முடியாமல் இருந்தது. மேலும் தேசிய பாதீட்டு திணைக்களத்திடமிருந்து தேவையான நிதிஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதென அறிவித்திருந்தும் நிதிஏற்பாடு கிடைக்காமையால் நிர்மாணம் மந்தகெதிக்கு உட்பட்டது. |

**2.2 செலவின முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) செலவின விடயமொன்றிற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா ஒரு மில்லியனான நிதிஏற்பாடு எவ்வித பயன்பாடொன்றில்லாமல் | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்பார்க்கப்பட்ட செலவினம் ஏற்படாத காரணத்தினால் மொத்த தேறிய நிதிஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| | முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | 25 மீண்டெழும் செலவின விடயங்களுக்காக மிகை நிதி மேற்கொள்ளப்பட்டதால் அச்செலவின விடயங்களில் நிதிஏற்பாடு பயன்படுத்தப்பட்ட தன் பின்னர் சேமிப்புக்கள் செலவின விடயங்களுக்கான தேறிய நிதிஏற்பாட்டின் 12 சதவீதம் முதல் 95 சதவீதம் வரையான அளவினைக் கொண்டிருந்தது. | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | செயற்திட்டம் தொடர்பாக தீர்மானம் எடுப்பதில் மந்தமான நிலை சேமிப்புக்கு காரணமாக இருந்தது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பணம் விடுவிக்கப்பட்டிருந்தும் செயன்முன்னேற்றம் கண்டிராத செயற்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 13-14 வயது தொகுதியை கடந்துள்ள விளையாட்டு திறமைகளுடைய பிள்ளைகளை விஞ்ஞான ரீதியில் இனங்கண்டு 2024 மற்றும் 2028 ஆம் ஆண்டுகளில் நடைபெறும் ஒலிம்பிக் போட்டிகளுக்கு தொடர்புபடுத்துவதற்கான செயற்திட்டம் தேசிய திடமிடல் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. 2016 ஆம் ஆண்டு முதல் 2018 வரை செயற்படுத்தவுதற்கு திட்டமிடப்பட்டிருந்த இச்செயற்திட்டத்திற்காக மொத்தம் ரூபா 474 மில்லியன் நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரை அதற்கு ரூபா 132.1 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. இச்செயற்திட்டம் மீளாய்வாண்டின் போது நிறுத்தப்பட்டிருந்ததுடன் செயற்திட்டத்தின் செயன்முன்னேற்றம் மற்றும் நிறுத்தியமைக்கான காரணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | திட்டமிட்ட செயற்பாட்டினை நிறைவேற்றுவதற்கு தேவையான ஏனைய திட்டங்கள் மற்றும் கால சட்டகம் என்பவற்றை சரியாக திட்டமிட வேண்டும். | செயற்திட்டத்தை நிறைவேற்றும் ஏற்பட்ட சிக்கலான நிலைமையொன்றின் பேரில் செயற்திட்டம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டதுடன் மீண்டும் அச்செயற்திட்டம் புதிய வேலைத்திட்டமொன்றின் கீழ் ஆரம்பிப்பதற்காககல்வி அமைச்சுடன் கலந்துரையாடப்பட்டு வருகின்றது. |

### 3.2 செயற்திட்டங்கள் நிறைவேற்றுவதில் தாமதம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண மற்றும் மாவட்ட விளையாட்டு தொகுதி நிர்மாணத்தின் கீழ் 12 மாவட்ட விளையாட்டுத் தொகுதிகள் மற்றும் 7 மாகாண விளையாட்டுத தொகுதிகளை நிர்மாணிப்பதற்காக ரூபா 1,000 மில்லியன் நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தன. மீளாய்வாண்டின் போது 10 மாவட்ட விளையாட்டு தொகுதிகளினதும் 07 மாகாண விளையாட்டு தொகுதிகளினதும் நிர்மாண வேலைளை ஆரம்பிப்பதற்காக ரூபா 692 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அதில் 6 மாவட்ட விளையாட்டுத் தொகுதிகளும் 2 மாகாண விளையாட்டுத் தொகுதிகளினதும் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் எஞ்சிய 4 மாவட்ட விளையாட்டுத் தொகுதிகளினதும் 5 மாகாண விளையாட்டுத் தொகுதிகளினதும் வேலை பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. | திட்டமிட்ட செயற்பாட்டினை நிறைவேற்றுவதற்கு தேவையான கால சட்டகத்தை சரியாக திட்டமிட வேண்டும். | இதுவரை அநுராதபுரம், மாத்தறை, பொலன்னருவ, புத்தளம், திகன, பண்டாரகம, கிளநொச்சி, கேகாலை, மட்டக்களப்பு ஆகிய விளையாட்டு தொகுதிகள் பொது மக்களுக்காக திறந்துவைக்கப்பட்டுள்ளன. காலி, அம்பாறை, இரத்தினபுரி, மாத்தளை விளையாட்டுத் தொகுதிகள் 2019 யூன் இறுதி அளவில் பொதுமக்களுக்கு கையளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய விளையாட்டுத் தொகுதிகளை 2019 ஆம் ஆண்டு முடிவடைவதற்கு முன்னர் பொதுமக்களுக்கு கையளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. |

### 3.3 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) சம்பள மாற்றத்தின் கூடுதலாக கொடுப்பனவு செய்த சம்பளத்தை அறவிடாமை | | |
| விளையாட்டுத்துறை உத்தியோகத்தர்கள் ஒன்றிணைந்த சேவையின் செயற்திட்ட உத்தியோகத்தர் பதவிக்கு பதவி உயர்வு வழங்குவதற்குரிய சம்பள மாற்றத்தின் போது சம்பளம் கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன. தற்போது சேவையிலுள்ள 25 உத்தியோகத்தர் களிடமிருந்து ரூபா 1,197,957 தொகையும் ஓய்வுபெற்ற 5 | நிதிப் பிரமாணம் 119(1) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | குறித்த உத்தியோகத்தர்களிடமிருந்து இப்பணம் அறவிடப்பட்டு வருகின்றது. |

| | | |
|---|---|---|
| உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 496,524 தொகையும் 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அறவிடப்பட்டிருக்க வில்லை. | | |
| (ஆ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்றின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 151,786 ஆக இருந்ததுடன் அந்த நிலுவைக் கடன் மீதிகள் 5 ஆண்டுகளுக்கு மெற்பட்ட கால வீச்சொன்ற கடந்திருந்த போதிலும் அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது. | குடியரசின் தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவின் ஏற்படுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். | உரிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) **விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்** | | |
| (i) திணைக்களத்திற்குரிய கெப் வண்டியொன்று ஓராண்டு காலமாக விளைவற்றும் குறைப்பயன்பாட்டுடனும் காணப்பட்டது. | 1997 செப்தம்பர் 30 ஆந் திகதிய 353 ஆம் இலக்கம், 2009 நவம்பர் 13 ஆந் திகதிய 438 ஆம் இலக்கம், 2003 சனவரி 03 ஆந் திகதிய 353(5) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை மற்றும் நிதிப்பிரமாணம் 771 இன் பிரகாரம் விளைவற்றும் குறைப் பயன்பாட்டுடனும் காணப்பட்ட சொத்துக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | திருத்த வேலைகளுக்காக தொடர்பு படுத்தப்பட்டுள்ளது |
| (ii) 2016 திசெம்பர் 23 ஆந் திகதி களஞ்சியத்திற்கு பொறுப்பேற்கப்பட்டிருந்த ரூபா | அரசிற்கு சொந்தமான சொத்துக்கள் செயற்திறனாகவும் | இது தொடர்பாக உள்ளக கணக்காய்வொன்று |

| | | |
|---|---|---|
| 12,995,000 பெறுமதியான பாரந்தூக்கம் இலத்திரனியல் தீர்வு சமிக்ஞை முறைமை உபகரணம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆக்கபூர்வமாகவும் பயன்படுத்த வேண்டும் | கோரப்பட்டதுடன், அதனை அடிப்படையாக கொண்டு எதிர் காலத்தில் குறித்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் ஆரம்பிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த மேலதிக பொருட்களை வழங்குமாறு குறித்த நிறுவனம் எழுத்துமூலம் அறிவிக்கப்பட்ட போதிலும் அவர்கள் அந்த வேண்டுகோள் நிராகிரக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் இப்போதே இப்பொருட் தொகுதிகள் ஏதேனும் வகையில் பயன்பாட்டிற்கு எடுக்கும் நோக்கில் எதிர்வரும் போட்டிகளின் போது இந்த உதிரிப்பாகங்கள் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்காக இப்பொருட் தொகுதி பயன்பாட்டிற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வு
--------------------------------------------------------

| | | |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டிற்குரிய பொருள் மெய்மையாய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டியிருந்த மிகை மற்றம் பற்றாக்கறை தொடர்பாகவும் ஏனைய பரிந்துரைகள் தொடர்பாகவும் நிதிப்பிரமாணம் 752(4) மற்றும் 770 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | 2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்பட்ட தாமதம் காரணமாக பொருள் மெய்மையாய்வு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யாத மாவட்டங்களுக்குரிய இத்திணைக்களத்தின் உத்தியோகத்தர்களை ஈடுபடுத்தி அந்நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. |

### 3.5 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 1.2 வழிகாட்டலுக்கு முரணாக தேசிய குழாம்களில் விளையாட்டு வீரர்களின் உணவுச் செலவினத்திற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 54,625,367 செலவிடப்பட்டிருந்தது. | அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 1.2 வழிகாட்டலின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். வதிவிடத்தின் நடவடிக்கைகள் முறைப்படுத்தவுதற்காக இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இதுவரை அனைத்து உணவுக் கொள்வனகளும் பெறுகை செயற்பாட்டிற்கு இணங்க இடம்பெறுவதுடன் உணவுகள் கொள்வனவிற்காக அரசின் இணை நிறுவனமொன்றாக Markfed நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. உணவு வழங்குதல் தொடர்பாக முறையான உள்ளக கட்டுப்பாடொன்று ஏற்படுத்துவதற்காக புதிய ஆவண முறைமையொன்று தயாரிக்கப்பட்டு வருகின்றது. எதிர்காலத்தில் போது இதற்காக கணனி மென்முறைமையொன்று வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. |

## 4. நிலைபேறான அபிவிருத்தி

### 4.1 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான 2030 ஆண்டு நிகழ்ச்சிநிரல் தொடர்பாக இணையத்தளத்திலும் உரிய சுற்றறிக்கை மூலமும் திணைக்களம் அறிவூட்டப்பட்டிருந்த போதிலும் பதவியணியினர் போதியதாக இல்லாமையால் நிலைபேறான அபிவிருத்தி இலக்கை நோக்கி அடையும் போது குறித்த செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துவதற்காக சகல தரப்பினரும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் தரவு சேகரிப்பு முறைமையொன்று | நிலைபேறான அபிவிருத்தி இலக்கை நோக்கி அடையும் போது திணைக்களத்தின் கடமைகள் பொறுப்புக்கள் முறையாக இனங்காணப்பட்டு அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன் பல கடமைகள் நிறைவேற்றுவதற்காக இத்திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டுள்ளதால் தரவு சேகரித்தல் சிரமமாக உள்ளது. எவ்வாறாயினும் இதுவரை தகவல் தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்டு தரவு சேகரிப்பதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. |

காணப்படவில்லை.

## 5. நல்லாளுகை

### 5.1 விளையாட்டு வீராங்கணைகளுக்கு சேவைகள் நிறைவேற்றுதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| **(அ) உணவகமும் விளையாட்டு வீராங்கணைகளுக்கு விடுதி** | | |
| (i) விடுதியின் சமையலறைக்காக கொள்வனவு செய்யப்படும் பொருட்கள் தொடர்பாக முறையான உள்ளக கட்டுபாட்டு முறைமையொன்று செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதன் போது<br>• பொருள் கட்டளையிடல் புத்தகங்கள் பயன்படுத்தப்படாமை.<br>• பொருட்கள் பெறுவனவு மற்றும் வழங்கல் தொடர்பான முறையான பதிவேடொன்று பேணப்படாமை<br>• வழங்குனரால் பொருட்களுடன் பட்டியலொன்று சமர்ப்பிக்கப்படாமை.<br>• பெறப்படுகின்ற உணவுப்பொருட்கள் முறையாக கண்காணிக்கப்படாமை<br>• உணவினை பெற்றுக் கொள்ளும் விளையாட்டு வீரர்களின் பதிவேடொன்று காணப்படாமை போன்ற விடயங்கள் அவதானிக்கப்பட்டது. | சமையலறைக்காக கொள்வனவு செய்யப்படும் பொருட்கள் பெறுவனவு மற்றும் வழங்கல் தொடர்பான முறையான பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றேன். தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. தேவையான பதவியணியினருக்கான வெற்றிடங்களை நிரப்ப விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. |
| (ii) திணைக்களத்திற்குரிய டொரிங்டன் விளையாட்டரங்கிற்கு அண்மையில் அமைந்துள்ள மற்றும் ரீட் மாவத்தையில் அமைந்துள்ள விளையாட்டு வீரர்களின் இரண்டு விடுதிகளில் திணைக்களத்தினதும் விளையாட்டு அமைச்சிலும் சேவை புரிகின்ற 65 பேர் தங்கியிருந்தனர். | விளையாட்டு வீரர்களின் விடுதிகளில் உத்தியோகத்தர்கள் தங்கியிருப்பதால் கூடுதலான விளையாட்டு வீரர்களுக்கு தங்குமிட வசதிகளை வழங்குவதற்குள்ள இயலஜம இல்லாமல் | தங்கியருக்கம் உத்தியோகத்தர்களிடமிருந்து விடுதிக் கட்டணமாக அறவிடுவதற்காக அமைச்சு செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதுடன் அக்கட்டணங்களை தீர்மானிப்பதற்காக அரச விலை |

| | | | |
|---|---|---|---|
| | | போயுள்ளது. | மதிப்பாளர்களுக்கு தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. |
| (ஆ) | விளையாட்டு சங்கங்களை ஒழுங்குபடுத்தல் ----------------------------------------------------- | | |
| (i) | 2013 சனவரி 15 ஆந் திகதிய 1793/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானிப் பத்திரத்தின் மூலம் வெளியிடப்பட்ட 2013 இன் 01 ஆம் இலக்க தேசிய விளையாட்டுச் சங்க கட்டளையின் 35 ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சிலிருந்து மானியங்களைப் பெற்றுக்கொள்ளம் எதிர்பார்க்கும் தேசிய விளையாட்டுச் சங்கமான்றினால் தயாரிக்கப்பட்ட வருடாந்த பாதீட்டில் ஊரிய மானியங்கள் மற்றும் தற்குரிய பயன்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளதா என பகுப்பாய்வு ரீதியாக மதிப்பீட்டிற்கு உட்படுத்தாமல் 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 118,528,187 தொகை விளையாட்டுச் சங்கத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. | 2013 இன் 01 ஆம் இலக்க தேசிய விளையாட்டுச் சங்க கட்டளையின் 35 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் இவ்வாறு பணம்பெறும் போது முறையான பகுப்பாய் வொன்றுடன் மேற்கொள்வ தற்கு நடவடிக்கை எடுக்கப்படும் |
| (ii) | 2017 ஆம் ஆண்டின் 13 விளையாட்டு சங்கங்களினால் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படாமல் இருந்ததுடன் அச்சங்கங்களுக்கு ரூபா 13,322,649 ஆன மானியங்கள் வழங்கப்பட்டிருந்தது.அவ்வாறு வழங்கப்பட்ட மானியங்களை முறைப்படி பயன்படுத்தியுள்ளனரா என உறுதிப்படுத்துவதற்கு திணைக்களம் பின்தொடர நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தேசிய விளையாட்டுச் சங்க கட்டளையின் 35 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். எதிர்காலத்தில் விளையாட்டு சங்கங்களுக்காக எவ்வித மானியமொன்றோ அல்லது அனுசரணையோ வழங்கப்பட மாட்டாது. |